தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஹு தை மீ 15உ (28-1-'23.) | ப. 38.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 401
(உதவி பத்திராதிபர்)
2. ஈசன் செயல் ... 403
(K. S. வெங்கடரமணி, M. A., B. L.)
3. புயற் காற்று ... 403
(V. நாராயணையர், M. A. M. L.)
4. ஸ்ரீ ரவீந்திரநாத கவீந்திரர் ... 405
(ஸ்ரீ பார்த்தஸாரதி மிச்ரன்.)
5. வான மண்டலம் ... 407
(K. N. சுந்தரேசன், M. A.)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

	உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம்	ரூ. 3 0 0	ரூ. 3 8 0
1-வருஷம்	ரூ. 5 0 0	ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

சீர்திருத்தச் சட்டத்தைப்பற்றி சட்டஸபை அங்கத்தினர்களுக்குஇருந்தமோகமெல்லாம் வீணாகிவிட்டது. பிரிடிஷாருக்கு இந்தியரிடமுள்ளதாக சிலர் நினைத்த அபிமானமெல்லாம் உண்மையல்லவென்றும் இந்தியர்களை எல்லா விஷயத்திலும் தங்களுடைய அடிமைகளாக்கிய பின்னரே, சுய ஆட்சிதனை அளிக்கப்போவதாகவும் பொருள்படும் வண்ணம் இந்தியா மந்திரியார் வெளியிட்டுவிட்டார். சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் இந்தியா சட்ட ஸபையார் அதிக சுதந்தரம் கொடுக்கும்படி இந்தியா மந்திரியாரை வேண்டிக்கொண்டார்கள். இவ்வளவு நாட்கள் சென்றபின் இக்கோரிக்கைக்கு மந்திரியார் பதிலளித்துவிட்டார். சீர்திருத்தச் சட்டம் அமுலிலிருந்து இந்தியர்களுடைய யோக்கியதையை பரீட்சித்த காலம் போதாதாம். பரீட்சை நடந்தவரை அவருக்கு திருப்திகரமாயில்லையாம்.

* * *

ஜனநாயக கட்சியார் என்ற ஓர் ஸ்தாபனத்தின் அத்யக்ஷராக ஸ்ரீமான் சேஷகிரி ஐயர் தான் செய்யப்போகும் தேசஸேவையின் முறைகளை இவ்வாரம் கூறியிருக்கிறார். சட்ட ஸபைகளைக் கொண்டு பல முன்னேற்றங்களையும் செய்வித்து ஜனங்களின் சுதந்தரத்தை பல வழிகளில் அதிகப்படுத்த முயற்சிக்கப் போகிறாராம். சுதந்தரங்களைப் பற்றி சட்டஸபையில் பேசலாமேயொழிய வேறு யாது செய்யக்கூடும். தீர்மானமும் செய்துவிடலாம். அதை இராஜப்பிரதிநிதி ஏற்றுக்கொள்ள வேண்டுமே. இந்தியா மந்திரியார் இணங்கவேண்டுமே. சட்டஸபை யங்கத்தினர்களுக்கு இந்தியா மந்திரியார் செய்திருக்கிற மரியாதை இப்போதுதான் வெளிவந்து விட்டதே. இனியும் சட்டஸபையின் மகிமையைப் பற்றிய பிரமை கொள்ளலாமோ?

* * *

நமது இந்தியா விஷயமாய் பரீட்சைகள் நடந்தேற வேண்டும் என்று விவாதிக்கப்படுகிறதே தவிர மற்ற நாடுகளெல்லாம் சுயவாட்சிக் குரிய பதவியில் இருக்கின்றனவாம். மோஸல் என்ற பிரதேசம் துருக்கியருடைய ஆளுகையில் பல காலமாய் இருந்தும் அதற்கு சுயவாட்சி கிடைக்க வேண்டுமாம். ஜனங்களின் இஷ்டத்தை அநுசரித்த ஆட்சி அப்பிரதேசத்தில் வேண்டுமாம். இது விஷயமாய் ஸர்வதேச ஸங்கம் முன்பாக தீர்மானிக்கப்பட்டு அத்தீர்மானப்படி துருக்கியர் நடக்க வேண்டுமாம். தங்களுக்கு என்று ஓர் நியாயம், பிறருக்கு வேறு நியாயம் போலும். நமது இந்

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

யாவின் சுயவாட்சி விஷயமாயும் ஏன் ஸர்வதேச ங்கம் விசாரணை செய்யக்கூடாது. இந்தியர் எல்லோரும் சுய வாட்சிக்கு பாடுபட்டும் பிரிடிஷார் இணங்கிவரவில்லையே. இந்த நியாயத்தை யார் கேட்கப் போகிறார்கள்.

* * *

சௌரி சாரா ஸம்பவத்தில் கைது செய்யப்பட்டு விசாரணை யடைந்தவர்களில் 172 குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை விதித்து விட்டார் நியாயாதிபதி. குற்றம் எவ்விதமா யிருப்பினும், நியாயாதிபதியின் கொடுந் தணடனை சொல்லக்கூடவில்லை. போலீஸார் கோபமடைந்த ஜனக்கூட்டத்தினிடம் ஸமாதானமாய் நடந்து கொள்ளாததாலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி ஜனங்களை வருத்தியதாலும் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கிறதெனக் கூறும் நியாயாதிபர் இக் கடும் தண்டனை யிட்டது எக்காரணத்தாலோ?

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமி முதலியார் எழுதியது

	ரூ.	அ.
இந்திரா பாய் ..	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தா சிங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

பரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழிநிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக்காணலாம். ராஜீய விஷயத்தில் உயர்நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலை விருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச்சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டுமென்பதே இந்நூலில் நோக்கமாகும்.

விலை ரூபா 1—0—0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

இனும் ! இனும் !!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தேன்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம், தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடைக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனுமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

வெளியாகி விட்டது ! வெளியாகி விட்டது !!

நீண்ட காலமாய் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கோயம்புத்தூர் வக்கீல்
V. குப்புசாமி அய்யரவர்களுடைய

ஸ்ரீமத் பகவத் கீதை

யின் மொழி தமிழ் பெயர்ப்பு ஐந்தாவது பதிப்பாக இப்போது வெளிவந்து விட்டது. இதில் மூலஸ்லோகம் கிரந்தத்திலும், தமிழ் ஸ்லோகம், பதவுரை, பொழிப்புரை மதத்திரய பாஷியங்களின் அபிப்பிராய பேதங்கள், ஸ்வய அபிப்பிராயம் முதலியவை அடங்கியுள்ளன. முதல் 10 அத்தியாயங்கள் கொண்ட முதல் வால்யம் ராயல் 1-8 சைசில் 566 பக்கங்கள் கொண்டது. காலிகோ பைண்ட் செய்யப்பட்டது. விலை ரூபா 5—0—0.

வி. பி. தபாற் செலவு 0—11—0.

இரண்டாவது வால்யம் அச்சிலிருக்கிறது.

A. சபாபதி பிள்ளை, ருக்மா மான்ஷன்,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஈசன் செயல்

[K. S. வேங்கடரமணி M. A., B. L.]

(1)

மேல் வானத்தில் உலாவிவரும் பயனில்லா மேகத்தின் பின் கதிரவனும் மறைந்து விட்டான். கிழக்கில் சமுத்திர ராஜாவோ, அடங்காத ஆனந்தங்கொண்டு, நீர்கொண்ட காற்றை அள்ளித்தெளிக்கிறார். அஸ்தமன காலமோ, சாந்தமும் சந்தோஷமும் கூடியிருக்கிறது. எனது அருகில் காவிரி அம்மன், குடகு நாட்டிலிருந்து பல காதங் கடந்து, கால் சோர்ந்து, காதல் கொண்டு, நீர்க்குமிழி கண்சொரிந்து, திக்கற்று, மனம் கலங்கி, சுழலுகிறாள். நாடி வரக்கூடாத சமுத்திர ராஜா எப்பொழுதும் புலம்பி காத்து வருகிறார். அவரிடம் புகும் பாக்கியம் சமீபித்து விட்டதை அறியாத காவிரி அம்மன் வீணாய்ச் சுழலுகின்றாள்.

நானோ, ஒருக்காலும் கிட்டாத கனவுகளை கருதி, தனிமையில் காவிரி மணலில் கரையோரம் சாய்ந்து வருந்துகிறேன்.

(2)

உருகும் வெண்ணெய்போல், அஸ்தமனம் அழிய, இருள் எங்கும் பரவுகிறது. இரவை பாதுகாக்கும் நக்ஷத்திரங்கள் கூட்டமாய் வெளிக்கிளம்புகின்றன. கிணற்றுத் தவளை போன்ற மானிடரே! வைரமணிபோல் பிரகாசிக்கும், இந்த இந்திரலோக வாசிகளின் பெருமையை அறிவீர்களோ?

(3)

காவிரிக் கரையில், மணல் மேட்டில் சாய்ந்திருக்கும் நான் அளவற்ற நீரின் ஒய்வின்மையை அடைகிறேன். என் மணல் மேடு, அழகு வாய்ந்த ஓரிடம். வளைந்து ஓடும் ஒற்றடிப் பாதை என் கிராமத்திலிருந்து இவ்வழி செல்லுகிறது. ஏகாந்தமாய், இயல்பைப் பெருக்கும் தபஸுக்கு ஏற்ற இடமே இது.

(4)

அந்திக் கடல் காற்று உள்குளிர அடிக்கின்றது. நானும், தினசரிபோல், இன்றும் உள் அகன்று வேலை யொழிந்து, என் மணல் மேட்டிற்குச் செல்லுகிறேன். அதோ அசைவு போடும் எருதுபோல், நானும் என் இந்த இல்லற வாழ்க்கையைப் பற்றி, பொழுதெல்லாம் செக்கிழுத்த வறுமையை மறந்து, அசைவு போட்டால் என்ன.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A. M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அக்ஷதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாணகாலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாரணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும் ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடுசென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறுஇடம் நோக்கிச் சென்றதும்; கப்பல் சிறிது தூரம் போனபிறகு ஆற்றில் மணலில் சிக்கிக்கொண்டதும் சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை.)

கமலா கண் விழிக்கும்போது இருள் நீங்கவில்லை; கண் விழித்ததும் தான் தனித்திருந்தது மட்டும் தெரிந்ததே யொழிய, தான் எங்கிருப்பவள் என்பதை நினைந்து கொள்ள இரண்டொரு நிமிஷ காலமாயிற்று; படுக்கையினின்றும் எழுந்து கதவைத் திறந்து வெளியே உற்று நோக்கினாள். அமைந்துறங்கும் நதியின்மேல் மெல்லிய வெண் போர்வை போர்த்தாற்போல் பனி பரந்திருந்தது. இருளின் மீது ஒரு மங்கிய வெள்ளொளி பரந்திருப்பது போல் மங்கலாயிருந்தது வெளிப்புறமெங்கும்; மரங்களினூடே தோன்றிய கீழ்வானமும் இருள் மங்கி வெள்ளொளி பரந்து அருணோதய மாகும் தருவாயில் இருந்தது. இரும்புபோல் விருண்டிருந்த ஆற்றுநீர் பரப்பிலும் மீன் படகுகளின் விரித்த பாய்களின் வெண்மை அவளது கண் முன் தோன்றியது.

கமலாவின் மனதில் இன்னதென்று அவளுக்கு விளங்காத வலிபொன்று பரந்திருந்தது; உதய வேளையிலே பனி மூடியதால் இவ்வாறு காலைப்பொழுதும் அவள் கண்களுக்கு மங்கியதாய் தோற்றுதல் ஏனோ? ஊற்றுப் பெருக்கு போல் அவள் மனதில் பெருகி அவள் தொண்டையை வந்து அடைத்துக் கொண்டு கண்களின் துக்கமாகப் பொங்க நிற்கும் சோகம் அவளுக்கு வந்தது எங்கிருந்தோ? தான் நிர்கதியாயிருப்பவள் என்ற எண்ணம் இப்பொழுது வருவானேன்? நேற்று இப்பொழுதுக்கெல்லாம், தானும் தன் கணவனும் உற்றார் அற்று தனித்திருப்பவர்கள் தனக்குறவு என்று சொல்லும்படியானவர்கள் ஒருவருமே இல்லையே என்ற விஷயத்தை முற்றும் மறந்திருந்தவளாயிற்றே! அதற்குள் அவளது தனிமையை விளக்கிக் காட்டும்படி என்ன நேர்ந்தது. அவளைத் தாங்கி நிற்க, இதுவரைபோல் இராமேசன் ஒருவன் போதாதோ? "உலகு அலகில்லாதது, அதில் பொருட்டிலாத ஒரு சிறு அம்சம் தனித்திருக்கிறேன்" என்ற எண்ணம் ஏனிப்படி திடீரென்று அவள் மனதில் உதித்து அவளை துயரத்தில் அமுக்குகிறது?

இவ்வாறு கதவைத் திறந்துகொண்டு கமலா நிற்கவே, சற்று நேரத்திற்கெல்லாம் ஆற்றுப் பரப்பெல்லாம் பொன்னிறமாய் தளதளத்தது. கப்பல் வேலைக்காரர் தங்கள் வேலையைத் துவக்கினர்; கப்பலோட்டும் இயந்திரங்கள் சப்தித்துக் கொண்டு சுழலத் தொடங்கின. அந்த சப்தத்தால் கரையோரத்திலிருந்த கிராமச் சிறுவர்கள் கண் விழிப்புண்டு வேடிக்கை பார்க்கக் கரையோரமாய் வந்து நின்றனர்.

இந்த சப்தம் இராமேசன் தூக்கத்தையும் குலைத்தது. எழுந்ததும் கமலாவைக் காண்பதற்கு

கதவண்டை வந்தான். அவனைக் கண்டதும் கமலா திடுக்கிட்டு வெட்கித் தன் முகத்தை துணியால் மறைத்திருந்தாள் என்றாலும், முகத்தை மறைப்பதாய் துணியை நன்றாய் இழுத்து மூடிக்கொண்டாள். "நீ ஸ்நானம் செய்தாயிற்று, கமலா?" என்று கேட்டான் இராமேசன்.

அவன் கேட்டதில் கோபித்துக் கொள்ள இடமொன்று இல்லை போல் தோன்றிற்று; என்றாலும், அவள் ஏதோ வேறாகக் கொண்டாள் போலிருந்தது. அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு தலையை மட்டும் அசைத்ததைப் பார்த்தான்.

"சற்று சென்றால் இங்கே ஜனங்கள் போவதும் வருவதுமாய் இருக்கும்; ஆகையால் இப்பொழுதே ஸ்நானஞ் செய்வதே நல்லது" என்றான் இராமேசன்.

கமலா ஒன்றும் பதில் பேசவில்லை; நாற்காலியின் மேலிருந்த தன் மடித் துணிகளை எடுத்துக் கொண்டு ஸ்நான அறைக்குச் சென்றாள்.

இராமேசன இப்படி அதிகாலையில் எழுந்து ஸ்நானாதிகளைப் பற்றி தனக்குச் சொன்னது கமலாவிற்கு சரியென்று படவில்லை; தன்னுடன் பழகும்போது இராமேசன் வரம்பு மீறாமல் அதிகம் நெருங்கிப் பழகாமல் இருந்து வருவதை அவள் கவனியாதிருக்கவில்லை; மாமியார் காலடியின் கீழ் இருந்து எப்பொழுது கணவனுடன் பேச வெட்கி முகத்தைத் துணியால் மறைத்துக் கொள்ளவேண்டும் என்பதை அவள் கற்றிராவிடினும் அன்று காலையில் இராமேசனைக் கண்டதும் தன்னை யறியாமலே காரணமின்றியே, அவளுக்கு வெட்கம் உண்டாயிற்று.

ஸ்நானமானபின் கமலா தன்னறைக்கு வந்து தன் வேலையைச் செய்யத் தொடங்கினாள். புடவையின் தலைப்பில் முடித்திருந்த கொத்துச் சாவியை எடுத்து பெட்டியைத் திறந்தாள்; அப்போது அதில் தனக்கு முந்தின நாள் இராமேசன் கொடுத்த சிறிய பணப்பெட்டி அவள் கண்ணில் பட்டது; முந்தின நாள் அது அவளுக்குக் கிடைத்த போது ஒரு அரிய சந்தோஷத்தைக் கொடுத்து புதிய குதூகலத்தை விளைத்தது; அது கிடைத்த போது தனக்கு சுதந்திரம் கிடைத்ததென்று பெருமையுற்று அதை விலையற்றதோர் அரும் பொருளாகக் கொண்டு வெகு ஜாக்கிரதையுடன் தன் பெட்டியுள் பூட்டி வைததிருந்தாள். ஆனால், இன்றோ அந்த குதூகலம் எங்கேயோ போய்விட்டது; எவ்வாறாயினும் அந்தப் பெட்டி இராமேசனுடையதே யொழிய தன்னுடைய தல்லவே! தனக்கு மட்டும் சொந்தம் என்று சொல்லக் கூடியதல்லவே! தன்னிஷ்டப்படி விநியோகப்படுத்தும் சுதந்தரம் அதில் தனக்கு இல்லை என்றும், பிறரால் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட பொருள் என்றும் எண்ணினாள்.

"என்ன பிரமை, இப்போது! ஏதாவது பிசாசு இருந்ததா என்ன, பெட்டியிலே" என்று சொல்லிக்கொண்டே அவளறையுள் வந்தான் இராமேசன்.

"இந்தாருங்கள் உங்கள் பெட்டி" என்றாள் கமலா.

இராமேசன்: "நான் அதை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது?"

கமலா: "உங்களுக்கு எவை வேண்டுமோ சொல்லுங்கள், தருகிறேன்."

இராமேசன்: "ஆனால் உனக்கு ஒன்றும்வேண்டாமோ?"

கமலா: "எனக்கு காசு பணம் ஒன்றும் வேண்டாம்" என்றாள் தலையை நிமிர்த்திக்கொண்டு.

இராமேசனுக்கு புன்னகை யுண்டாயிற்று; "எல்லாரும் இப்படிச் சொல்லமாட்டேன் என்கிறார்களே; அது இருக்கட்டும்; அப்படி உனக்கு இது ஒரு பொருளாகத் தோன்றாவிட்டால் வேறு யாருக்காவது இனாமாகக் கொடுத்துவிடுகிறது தானே! எல்லாரையும் விட்டு என்னிடம் ஏன் திரும்பக் கொடுக்கவேண்டும்."

மறுமொழி ஒன்றும் கூறாமல் கமலா பெட்டியைக்கீழே வைத்துவிட்டாள். இராமேசன் பேச்சை நிறுத்தாமல் "வாஸ்தவத்தைச் சொல், கமலா, அந்தக் கதையின் முடிவைச்சொல்லவில்லையென்று தானே வருத்தப் பட்டுக்கொண் டிருக்கிறாய்"

"வருத்தம் ஒன்றும் இல்லை" என்றாள் கமலா கீழே பார்த்துக்கொண்டே.

இராமேசன்: "ஆனால் சரி; அந்தப் பெட்டியை எடுத்துக்கொள்; அப்படியானால் என்மேல் வருத்த மொன்றுமில்லை என்பதை நம்புவேன்."

கமலா: "அதற்கும் இதற்கும் என்னசம்பந்தம்? இது உங்களுடைய சொத்து; நீங்கள் தானே வைத்துக்கொள்ளவேண்டும்"

இராமேசன்: "அது எப்படி என்னுடையதாகும்; கொடுத்ததைத் திரும்ப வாங்கிக்கொண்டால் செத்துப்போனவுடன் பிசாசு ஆவார்களாம். நான் பிசாசு ஆகவேண்டு மென்று இஷ்டமா உனக்கு?"

இராமேசன் பிசாசு என்றதும் கமலாவுக்கு சிரிப்பு உண்டாயிற்று; அடக்க முடியவில்லை. சிரித்துக்கொண்டே "வேண்டவே வேண்டாம்! ஆனால் வாஸ்தவமாய் கொடுத்ததைத் திரும்ப வாங்கிக்கொண்டால் பிசாசு ஆய்விடுவார்களா? நான் கேட்டதே யில்லையே" என்றாள். இவ்விதம் சிரிப்பில் அவர்கள் இருவருக்கும் இடையிருந்த மனஸ்தாபம் விலகிவிட்டது.

"எனக்குத் தெரியாது வாஸ்தவமா இல்லையா என்று; வாஸ்தவத்தை அறிய ஒரேயொரு வழி தானுண்டு; அடுத்ததடவை பிசாசைக் காணும் போது நேரில் கேட்டு தெரிந்துகொள். அதுதான் வழி."

கமலாவின் குதூகலம் அதிகரித்தது. "நிஜமாய் நீங்கள் பிசாசைப் பார்த்திருக்கிறீர்களோ" என்று கேட்டாள்.

"நிஜமான பிசாசைப் பார்த்ததில்லை; போலிப் பிசாசுகளை மட்டும் எத்தனையோ பார்த்திருக்கிறேன்."

கமலா: "உமேசன் சொல்லுகிறான்—"

இராமேசன்: "உமேசன் யார், உமேசன்"

கமலா: "நமமுடன் கூட வருகிறானே அந்தப் பையன்; அவன் பிசாசைப் பார்த்திருக்கிறானாம்."

இராமேசன்: "ஓகோ, அப்படியானால் என்னை தோற்கடித்து விட்டானே அந்தப்பையன்."

இவ்விதம் சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும் போது கப்பல் வேலைக்காரர்கள் சும்மா இருக்க வில்லை. அதிக பிரயாசையின் மேல், மணலில் சிக்கிக்கொண்ட கப்பலை மெதுவாய் விடுவித்து

மிதக்கச்செய்தார்கள். அது புறப்பட்டு சற்று தூரம் போகுமுன் ஒரு பையன் கரையோரமாய் அதை நோக்கி ஓடிவந்தான். அவன் தலையில் ஒரு கூடையோடு அதிவேகமாய் ஓடி வந்துகொண்டே கைகளை காட்டிக் கப்பலை நிறுத்தும்படி சைகை செய்தான். ஆனால் கப்பல் தலைவன் அதைச் சற்றும் கவனியாதிருக்கவே, இராமேசபாபுவைக் கண்டு அந்தப் பையன் "பாபு, பாபு" என்று கூப்பிடவே,

"இதோ பார், என்னை 'டிகெட்டு' பாபு என்று நினைக்கிறான் இந்தப் பையன்" என்றான் இராமேசன் கமலாவை பார்த்து, கப்பலைத் தன்னால் நிறுத்த முடியாது என்று பதில் சைகை செய்து கொண்டே.

கமலா "ஓ ! நம்முடைய உமேசன் அன்றோ அவன்; அவனை விட்டுவிடலாமா; கூடாது. எப்படியாவது அழைத்துக் கொண்டுதான் போகவேண்டும்."

"எனக்காக நிறுத்தமாட்டார்களே" என்றான் இராமேசன்.

கமலா அதிக வருத்தத்துடனே "எப்படியாவது நிறுத்தச் சொல்லவேண்டும். நீங்கள் சொல்லுங்களேன்! கரைக்குக் கிட்டேதான் இருக்கிறோம்." சரி யென்று இராமேசன் கப்பல் தலைவனிடம் சொல்லவே, அதற்கு அவன் "நிபந்தனைகளுக்கு விரோதமாயிற்றே" என்றான்.

கமலாவும் இராமேசனுடன்கூட வந்திருந்தாள். ஆசையால் அவளும் இராமேசனுடன் வேண்டிக்கொண்டாள். "அவனை தங்க விடக்கூடாது; ஒரு நிமிஷம் நிறுத்தினால் போதும்; உமேசா! உமேசா" என்று பிரலாபிக்கவே.

இராமேசன் கப்பல் தலைவனை சம்மானிப்பதற்காக கொஞ்சம் பணம் எடுத்து உதவினான்; உடனே கப்பலை நிறுத்தி பையனை கப்பலில் ஏற்றிக்கொண்டார்கள் ; பையன் கப்பலில் ஏறியதும் இராமேசன் அவனைக் கடிந்து கோபித்துக் கொண்டான் ; ஆனால் உமேசன் சற்றேனும் வருத்தமின்றி கூடையை கமலாவின் காலடியில் வைத்துவிட்டு சற்றேனும் வருத்தமின்றி பல்லைக்காட்டிக் கொண்டு நின்றான்.

மனதில் இன்னும் சாந்தமடையாத கமலா "இதென்ன அசட்டுச் சிரிப்பு, கப்பலை நிறுத்தாவிட்டால் என்னமாயிருக்கும் ?"

பதில் சொல்வதற்குப் பதிலாக உமேசன் கூடையை கவிழ்த்தது வாழைக்காய் பூசனிக்காய் கத்திரிக்காய் கீரை முதலியவற்றை கீழே கொட்டவே, "இதெல்லாம் ஏது" என்றாள் கமலா. உமேசன் கொடுத்த ஜவாபை போலீஸார் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் ; முந்தின நாள் தயிரும் வேறு சாமான்களையும் வாங்க கிராமத்திற்கு சென்றபோது அங்கே தோட்டங்களில் காய்கறிகள் பயிராயிருப்பதைக்கண்டு, காலையில் எழுந்து கப்பல் மணலில் மாட்டிக் கொண்டிருக்கும் போதே, கரைக்குப் போய் யாரையும் கேட்காமலே தனக்கு வேண்டியவற்றை யெல்லாம் தோட்டங்களினின்றும் பறித்துக் கொண்டு வந்து விட்டான்.

"இதென்ன இது, பிறருடைய தோட்டங்களினின்றும் திருடி வருவது" என்று அதட்டிக் கோபித்தான் இராமேசன்.

"திருடவில்லை; ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் கொஞ்சம் கொஞ்சந்தான் எடுத்துக்கொண்டு வந்தேன்; ஒருத்தருக்கும் நஷ்டமில்லை" என்றான் உமேசன்.

"அப்படியா, கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்தால் திருட்டாகாதோ அது! போக்கிரிப் பையா ! போ இதை யெல்லாம் எடுத்துக்கொண்டு வெளியிலே, என் கண் முன்நில்லாதே !"

உமேசன் கெஞ்சிய பார்வையுடன் கமலாவைப் பார்த்துக் கொண்டே, "அம்மா ! இந்தக்கீரையை நாங்கள் 'பிரிங்கி' என்று சொல்வோம்; சமைத்தால் நிரம்ப நன்றாய் இருக்கும்; இது தான் 'பிடோ' இது—"

"போ, வெளியிலே" என்றான் இராமேசன். இந்தப் பேச்சைக்கேட்டு அவன் கோபம் மேலிட்டது "நீயும் உன் கீரையும்; எல்லாவற்றையும் ஆற்றில் உதைத்துத் தள்ளிவிடுவேன்"

உமேசன் கமலாவை நோக்கவே, அவளும் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போகும்படி கையைக் காட்டினாள். அவள் செய்கையினின்றும் தன்னிடம் அநுதாபம் வைத்திருக்கிறாள் என்று உணர்ந்த உமேசன் கூடையில் காய் கறிகளை எடுத்து வாரிப்போட்டு அதை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான். "சுத்தப்பிசகு அவன் செய்த காரியம்; இவ்வித விஷயத்தில் நீ தாக்ஷிண்யம் படக்கூடாது" என்று சொல்லிவிட்டு இராமேசன் ஏதோ காகிதம் எழுதவேண்டுமென்று தன்னறைக்குப் போய் விட்டான்.

ஸ்ரீரவீந்திரநாத கவீந்திரர்

[ஸ்ரீ பார்த்தஸாரதி மிச்ரன் ஸாஹித்ய சிரோமணி]

இங்கு சில மஹா புருஷர்கள் பெரும்பான்மையாய்க் காணப்படுகின்றனர். இவர்கள் அரிய விஷயங்களையும் தெளிவாய் அறிந்தவர்கள். தேசத்தை வேரோடு களைந்து வேருக்குவதிலேயே இவர்களுக்கு நோக்கம் மிகுதி. ஆதலால் கவியென்பவன் யாரென்று இவர்கள் கவனிப்பதேயில்லை. ஒருவனைக் கவியென்று உலகம் கொண்டாடும் காரணம் எல்லாம் தெரிந்த இவர்களுக்குத் தெரியாமலிராது. பதங்களை நன்றாய் நிறுத்து, கணக்கிட்டு வரிசை வரிசையாய் அடுக்க வேண்டுமென்பதே இவரறிந்த காரணம். பதங்களை மூட்டை கட்டத் தெரியாதவன் இவர்மனதில் கவியாய்த் தோன்றான். 'கூப்பிட்டான், சாப்பிட்டான், அலம்பினான், புலம்பினான்,' என்று பதங்களைத்தேடித் தேடி வரிசையாய் மாட்டித்தொங்க விடுபவனே இவர்களுக்குக் கவி. 'காலம் கடல்போல் இரவில் அமைதியாய்ப் பரவியிருந்தது' என்று வசனத்தில் எழுதினால் இம்மஹா புருஷர்கள் மண்ணைவாரி யிறைப்பார்கள். காலம் அமைதியாய் பரவி யிருப்பதென்றால் என்ன அர்த்தம்? இப்படி எழுதும் வழக்கமே கிடையாது. கடல் பரவி யிருப்பதையே காண்கிறோம். எனக்கேட்கும் பண்டிதர்கள் நம் நாட்டில்தான் விளங்குகின்றனர். 'கார்விரி கூந்தலும் தோள்களிற்புரள—' என்று வசனத்தில் எழுதக்கூடாதாம். செய்யுளாய் சேர்க்கவேண்டுமாம். 'கூப்பிட்டான்—' முதலிய பதங்களைக் கணக்குப்படி கோத்தவனே கவி. மற்றைய வாக்கியங்கள் வசனத்தி லிருப்பது பற்றியே வீணாய் விடும்.

ஆதிகவிகள் இயற்றிய பல நூல்களிலும் பயின்று கனவிலும் பாராமல் ஒப்பிக்கும் பண்டி-

தார்கள் முடிவு கட்டியது இதுவே. பரீக்ஷையில் பாடலாகவே கேள்விகளை எழுதியும் சில பண்டிதர்கள் தம் கவிதாசக்தியைக் காட்டுகின்றனர். பரீக்ஷைக்கென்று வைத்த புஸ்தகங்களுக்கு நோட்ஸ் எழுதும் பண்டிதர்கள் ஒவ்வொரு பாட்டுக்கும் இரண்டு பக்கம் பதவுரை, பொழிப்புரை, இலக்கணக்குறிப்பு முதலியவற்றை எழுதுவார்கள். அரும்பத விளக்கவகராதியோடு வசனபாகத்தை அடக்குவது வழக்கம். நுட்பமான விஷயத்தை வசனத்தில் எழுதக்கூடாது; எழுதவும் முடியாது—என்று பண்டிதர்கள் முடிவு கட்டியுள்ளனர். ஆகவே வசனத்திற்கு நோட்ஸ் தேவையில்லை. பக்கம் பக்கமாய்ப் பதவுரை எழுதும் பாட்டில் நுட்பமான விஷயம் இருக்கிறதா என்று கவனியுங்கள்.

இத்தகைய பண்டிதர்கள் விளங்கும் நாட்டில் கவீந்திரருக்கும் இடமுண்டோ!

(2)

இந்தியாவில் வடமொழி தவிர மற்றைய பாஷைகளுக்குத்தலைமை பூண்டது தமிழே. தமிழின் சிறப்பு இந்தியாவின் எல்லையையும் கடந்தது. இலங்கை சிங்கப்பூர், பினாங்கு, தென்னாப்பிரிகா முதலிய வெளிநாட்டிலும் தமிழ் விளங்குகிறது. இத்தகைய பாஷையில் எழுதப்படும் புஸ்தகங்களை கவனிப்போம். நாவல் நாடுகாடாய் ஓடுகிறது; வீடுவீடாய் விழுந்திருக்கிறது. புஸ்தகம் வெளிவந்த மூன்று மாதத்தில் விலையாகி மறு பதிப்பாகிறதென்று பத்திரிகைகளில் காண்கிறோம். ஆயினும் என்ன பயன்? நாம் எழுதும் புஸ்தகத்தில் கவி எழுதும் விஷயமே கிடையாது. காதல் தவிர வேறொன்றும் இப்பொழுது புஸ்தகம் எழுதுவோர்க்குத் தெரியாது. அதுவும் மனக்காதலல்ல. காலம் அமைதியா யிருக்கிறதென்றால் இனி என்ன நேரிடுமென்பதே தெரியவில்லை என்று அர்த்தம். அதற்குக் கடலை உபமானமாக்கி 'காலம் கடல்போல் அமைதியாய்ப் பரவியிருக்கிறது' என்று எழுதுபவனே கவி. இருள் நீங்குவதை—இருளென்னும் பறவை பறந்தோடி மறைந்தது என்றும், மனதில் புதிய புதிய எண்ணங்கள் தோன்றுவதை—என் மனவானில் பல புதிய நக்ஷத்திரங்கள் உதிக்கின்றன என்றும் எழுதுவதே சிறந்த காவ்யம். இம்மாதிரி புது விஷயங்கள் நம் நாவலிலுண்டா! ஸ்ரீரவீந்திரநாதர் எழுதும் ஒரு சிறுகதைக்குக்கூட நம் நாட்டு நாவல்கள் ஈடாகா. அவருடைய கதையை ஓடிக்கொண்டே படித்து விட்டு இதில் கதை யாதென்றே புரியவில்லை என்று சொல்வதில் நம் நாட்டிலுள்ளோரே தீரர்கள். அவருக்கு ஸமமாய் எழுத ஸரஸ்வதிக்கு பிள்ளையாய்ப் பிறந்தாலும் முடியாது. வங்காளத்தி லிருப்பவர்க்கு ஸமமாய் எழுதுவோரே இங்கு கிடையாது. மாடர்ன் ரிவ்யூ, பத்திராதிபரான ஸ்ரீராமாநந்த சடர்ஜியின். புதல்வி, ஸீதாதேவி பத்து பக்கத்துக்கு மேற்படாமல் எழுதிவரும் சிறுகதைக்குக்கூட நம்முடைய புஸ்தகங்கள் ஈடல்ல.

நம்நாட்டிலுள்ளோர் ஆங்கிலத்தில் எழுதுவதானால் பிழையின்றியும், அழகாயும் எழுத விரும்புகின்றனர். தமிழ் மாதுக்கு வந்த தீங்கைப் பாருங்கள்! தமிழில் எழுதும் நண்பருக்குப்பிழையே தோன்றுவதில்லை. அழகாய் எழுதவேண்டுமென்ற எண்ணமே உதிப்பதில்லை. படிப்பில்லாதவர்கள் பாகவதராவதுபோல் நாவல் எழுதுவதும் பிழைப்புக்கு என்று ஏற்பட்டுவிட்டது. மேலும் அநேகர் தம்முடைய பாஷையை இகழ்கின்றனர். பங்காளியர் தமது பாஷையில் எழுதுவதை கௌரவமாகக் கொண்டாடுகின்றார்கள். தமிழை விருத்தி செய்ய வேண்டுமென்று பத்திரிகைகள் எழுதுவது மாத்திரமே கொஞ்ச காலமாய்க் காணப்படுகிறது. எழுதும் விதத்தையே ஒருவரும் கவனிப்பதில்லை. பெரிய பெரிய பண்டிதர்கள் சேர்ந்து பிழையுள்ள புஸ்தகத்தையே பரீக்ஷைக்கு வைக்கின்றனர்.

(3)

மானிடராய்ப் பிறந்தவர்க்கு முக்கியமாயிருப்பது பாஷையே. நாம்பாஷையைக்கொண்டே ஒவ்வொரு காரியத்தையும் நிறைவேற்றுகின்றோம். நாய்கள்போல் சண்டையிட்டு நாம் காரியத்தை முடிக்கிறோமா? அவரவர்க்குத் தகுந்தவாறு பேசியோ எழுதியோ ஒவ்வொன்றையும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அனைவர்க்கும் தெரிந்த வார்த்தைகளையே ஒருவன் சொன்னால் மகிழ்ச்சியுடன் கேட்கிறோம்! மற்றொருவன் சொன்னால் இகழ்கிறோம். இதற்குக்காரணம்? அழகாய்ப் பேசத்தெரியவேண்டும். அழகாய்ப் பேசத்தெரியாதவனுக்கும் எழுதத்தெரியாதவனுக்கும் காரியம் கைகூடுவதில்லை. எப்பொழுதும் அழகாய் பேசவேண்டும். அழகாய் எழுதுமாறு பாஷையை வசப் படுத்திக் கொள்ளவேண்டும் இவ்வெண்ணம் இல்லாவிடில் பாஷை அழிந்துபோகும். பாஷையையே இழந்து நாம் மானிடராய் வாழ்வது எப்படி? தன் பாஷையை ஒருவரும் விடக்கூடாது. நம் நாட்டின் பெருமை நமது பாஷையாலன்றி வேறொன்றாலும் விளங்காது. பழைய காலத்தில் நடந்ததையெல்லாம் நமக்கு இப்பொழுது தெரியப்படுத்துவது பாஷை தவிர வேறல்ல. நம் நாட்டின் பழைய செய்திகள் நமது பாஷையிலன்றி, வேறொன்றிலும் எழுதப்படவில்லை. நம் நாட்டின் நிலைமையை அறியாமல் நாம் நாட்டைக் காப்பது எவ்விதம்? நமது பாஷையை நாமே அழித்து விட்டால் நாட்டின் பூர்வ நிலைமையைத்தான் எங்ஙனம் அறியமுடியும். ஆகவே நம்முடைய பாஷையை அழகாயும் பிழையின்றியும் நாம் கொண்டு வராவிடில் அது அழிந்துபோம். நாமும் அழிய வேண்டியதே. ஆதலால் பாஷையே அனைத்துக்கும் ஆதாரம். ஆங்கிலேயர்கள் இந்தியாவை வசப்படுத்தியவுடன் தம்முடைய பாஷையை நம் நாட்டில் பரவச் செய்ததை சற்று கவனியுங்கள். தம்முடைய பாஷையை இவ்விதம் பரவச்செய்யாவிடில் அவர்களால் ஆளமுடியுமா என்பதை ஒவ்வொருவரும் ஆலோசிக்க வேண்டும். அந்த பாஷையை நாம் அதிகமாய்க்கற்பது அவர்களுக்கு அடிமைத்தொழில் செய்வதற்கேயன்றி வேறல்ல. நாம் இங்கிலீஷில் தேர்ச்சிபெற்று இங்கிலாந்துக்கே குடிபோவதென்பதும் அஸாத்தியம். அறிவழிந்து கிறிஸ்தவ மதத்தில் சேர்பவர்கூட கிறிஸ்து பிறந்த ஊரில் குடியேற முடியாமலிருக்கின்றனர். நம்மிந்தியாவை விட்டால் அவர்களுக்கும் வேறு கதியில்லை. நம் மதம் வேண்டாம்; தேசம் மாத்திரம் வேண்டுமாம். இங்குள்ள நாம் நமது பாஷையை அலக்ஷியம் செய்வதும் தகுதியோ! ஆப்பிரிகாவில் குடியேறிய நம் இந்துக்கள்கூட நமது பாஷையைப் பாதுகாக்கின்றனர். ஆகவே நம்முடைய பாஷையை விடலாது. அதில் பிழையின்றிப் பழகவேண்டும். அதை அழகாய் அநுபவிக்கவேண்டும். கவிதையைக் கைப்பற்ற வேண்டும்.

(தொடரும்.)

வான மண்டலம்: பகவத் தரிசனம்.

[K. N. சுந்தரேசன் M. A.]

சூரியன் அஸ்தமித்து செவ்வானம் இருண்டு விட்டது. மேகப்படலங்கள் உலாவவில்லை. நிலாவு மில்லை. மேல் மெத்தைக்கு ஏறிப்போய் பரந்த வெளியாய் நாலாபக்கமும் விரிந்து தோன்றுகிற தெள்ளிய வானத்தை சற்று உற்று நோக்குவோம்.

என்ன காக்ஷி! ஆகாயமெங்கும் நக்ஷத்திரங்கள் இரைந்திருக்கின்றன. சில மின்னிக்கொண்டும் சில இமைக்காமல் ஏறிட்டு விழித்துக் கொண்டும், தீ போலும், வைரம் போலும், நீலம் போலும், பவளம் போலும், சில ஜொலித்தும், சில மயங்கிக் கொண்டும் தெரிகின்றன. கொத்து கொத்துகளாய் பார்த்தாலோ, தேள் போன்றும், வில் போன்றும், இடிகிணறு போலும் கட்டில்போலும், உழவனது ஏர், குயவனது உருளை, பாம்பு பல்லக்கு, குடை, ஈட்டி, இன்னும் பல பல வடிவங்கள் கோலம்போட்டிருக்கிறது. மணலை வாரி இரைத்தாற்போல திக்குக்குத் திக்கு நெடுக வானளாவி கவிந்து வெள்ளிய ஓர் வளைவும் தோன்றும். இவை யெல்லாம் உண்மையாய் யாவை? எல்லாமே நக்ஷத்திரங்களா? நக்ஷத்திரங்கள் என்பவை என்ன? மற்றவை என்ன?

இவை யனைத்தும், நம் பூமியைப்போல அந்தரத்தில் தொங்கும் வேறு லோகங்களே. பகல் நமது பூலோகத்தை கண்ணுக்குக் காட்டி அதன் அதிசயா திசயங்களை உணர்த்துவது போல இரவும் பிரம்மாவின் முழு கைத்திறனையும் காட்ட பிறலோகங்களையும் புலப்படுத்துகிறது. பின் ஏன் இப்படி மின்மினிபோல விளங்குகின்றன? தூரத்துப் பொருள்கள் உருவில் பெரிதாயினும் கண்ணுக்கு சிறு கடுகாய்த் தெரிவதை நாம் அறிவோம். அவ்வாறே, இந்த நக்ஷத்திரங்கள் முதலிய வெகு தூரத்துக் கப்பால் ஒளிர்கின்றன. நமது பூமி 8000 மைல் அகலமுள்ள பெரிய பந்து; இந் நக்ஷத்திரங்களோ பூமியினும் கோடி கோடி மடங்கு பெரியவை. மிக சக்தி வாய்ந்த பெரிய தூரதிருஷ்டி கண்ணாடிகளால் பார்த்தாலும் தெளிவாய் தோன்றுவதில்லை பல நக்ஷத்திரங்கள். இத்தகைய பிரம்மாண்ட எண்ணவொணு லோகங்கள் பல ஆகாயத்தில் வயங்குவது விபப்புண்டாக்குவது ஒருபுறமிருக்க, எவ்வளவு தூரத்துக்கு வெளியே இருக்கின்றன இவை என்பது இன்னம் ஆச்சரியம்; நிமிஷம் ஒன்றுக்கு ஒரு கோடி மைல் விரைவுடன் பாயும் ஒளிக்கிரணங்களை ஒரு நக்ஷத்திரத்தை விட்டு புறப்பட்டு நம் விழி வந்து சேர வருஷா வருஷங்கள் பிடிக்கின்றது எனக் கணக்கிட்டிருக்கிறார்களாயின், தாரகைகள் விண்ணிலே உறையுமிடம் என்ன தூரம் தூரம்! தூணிகளை அளக்க கஜ ரீதியாய் பேசுகிறோம். நாடுகளின் விஸ்தீரணங்களை மைல்களால் வரைகிறோம். ஒரு மைல் நீளத்தையே மனதில் சரியாய் உருப்படுத்த கஷ்டம் நமக்கு,—இந்த நக்ஷத்திர தூரங்களை உருவிக்க கோடிமைல்களால் கணக்கிட வேண்டியிருக்கிறதே—இதை மனம் நினைத்து கண்ணால் வசப்படுத்தி அறியவும் இயலுமா? வெறும் கண்ணுக்கு புலப்படுவதைவிட பன்மடங்கு வான்மீன்கள் பூதக் கண்ணாடியில் தெரிகின்றன. அதிலும் காணரியவை பல உள. நம்முயிர்க்கே ஆதாரமாய் நாம் மூச்சுவாங்குகிற ஆகாய வாயு பூமியைச்சுற்றி ஐந்நாறு மைல் சூழாமலிருப்பின் அவ்வெறு வெளியில் கோடிக் கணக்காய் இன்னம் தாரகைகள் புதிதாய் கண்ணுக்கு உதிக்கும். ஆனால் இப்பொழுதோ இவைகளைக்காண நம் விழி பாய முடியாது. வானத்தின் ஆழத்தை யார் அறிவார்? மேலும் கீழும் நாலா பக்கமும் எவ்வளவு தூரம் பிரபஞ்சம் நீள்கிறது! இதுமட்டுமா? நக்ஷத்திர கிரணங்கள் புறப்பட்டு இங்குசேர வருஷங்கள் ஆகின்றன என்றோம். இப்பொழுது தெரியும் ஒளி பல்லாண்டுகள் முன்னே கிளம்பியது. இப்பொழுது கிளம்புவது பல்லாண்டுகள்பின்னரே தெரியும். சிருஷ்டியாகி நாளாயினும் கிரணங்களே இங்கே வராத நக்ஷத்திரங்கள் அனேகமிருக்கின்றனவாம். ஆதலில்கடவுளுடைய அகண்டத்வத்தை நோக்குவதிலேயே அனுதினமும் காண்கிற தல்லவா? ஒன்று ஒரு விழியில், மற்றது மறுவிழியில், அலகிலா அழிவற்ற அண்டாண்டங்களை சிருஷ்டித்து அந்தரத்தில்நிறுத்திப் புரக்கும் அப்பாலாய் அகண்ட அனாதி அனந்த காரிருள் வண்ண கண்ணன் அந்நாளில் அருச்சுனனுக்கு அருளிக் காட்டிய விஸ்வரூபம் இஃதல்லால் வேறு ஏதாயிருக்கும்? இந்நாளும், இரவு தோறும் காரிருள் வானத்தே நமக்கும் விளங்குகிறதே!

உபயோகமுள்ளது!!

சுதேசியமானது!

அமர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக் சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25"	ரூ. 2½ முதல்	ரூ. 3	வரை
,, 2.	12 ,,	×27"	,, 4	,, 6	,,
,, 3.	16 ,,	×34"	,, 6	,, 9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8	,, 12	,,
,, 5.	20 ,,	×44"	,, 11	,, 13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½ முதல்	ரூ. 6	வரை
9½ ,,	× 40"	,, 3 ,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2 ,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application.
(Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, Poona.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

இனாம்! இனாம்!!

அழகான 12 ஷீட் காலண்டர். தமிழ் இங்கிலீஷ் தேதியுள்ளது. ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி தங்கள் விலாசத்தை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள்; முந்துங்கள்.

சகல விதமான பட்டு தினுசுகளும்
காசி விலைக்கு கொடுக்கப்படும்.
:: ஒருமுறை பரிக்ஷியுங்கள் ::

K. S. MUTHIAH & Co.,
188, Govindappa Naick Street, Madras.
Head Office: BENARES.